**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.**

**O.S.No.204/2025**

**நாள்.18.04.2026**

**வா.சா.1 - சிங்கராஜ்**

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் 8 வது வாதி ஆவேன். என் தரப்பு சாட்சியத்திற்கு எழுத்து மூல பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். வழக்கறிஞருக்கு நான் சொல்லி தயார் செய்யப்பட்டு என்னால் படித்துப் பார்க்கப்பட்டு பின்பு கையொப்பம் செய்யப்பட்டது. கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்யக் கேட்டுக்கொள்கிறேன்.

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 11.07.1986 | லேட்.சிங்கத்தேவர் என்பவரின் இறப்புச் சான்று | கணிணி நகல் |
| வா.சா.ஆ.2 | 10.01.2026 | லேட்.கோமதியம்மாள் என்பவரின் இறப்புச் சான்று | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.3 | 13.03.2022 | 03.02.2022 ல் காலமான லேட்.அங்கப்பத் தேவரின் வாரிசு சான்று | கணிணி நகல் |
| வா.சா.ஆ.4 | 01.07.1995 | லேட்.வெள்ளைச்சாமி என்பவரின் இறப்புச் சான்று | அசல் |
| வா.சா.ஆ.5 | 29.10.2013 | 28.07.2013 ல் காலமான லேட்.மாரியம்மாள் வாரிசு சான்று | அசல் |
| வா.சா.ஆ.6 | 08.07.2025 | 3 ம் பிரதிவாதி, 8 ம் வாதிக்கு கொடுத்த மேலெழுத்துக் கடிதம் | அசல் |
| வா.சா.ஆ.7 | | வா.சா.1 ன் ஆதார் அடையாள அட்டை | ஒளிநகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) |
| வா.சா.ஆ.8 | | வழக்குரையுடன் தாக்கல் செய்யப்பட்ட கொடிவழி ஜாபிதா | |

**முதல் விசாரணை முடிக்கப்படுகிறது.**

**2,3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் என்ன பரிகாரம் கேட்டு வழக்குப் போட்டுள்ளேன் என்றால் காலம்சென்ற சிங்கத்தேவர் வாரிசு சான்றிதழ் கேட்டு வழக்குப் போட்டுள்ளேன். காலம்சென்ற சிங்கத்தேவர் எந்த ஆண்டு மாதம், தேதியில் இறந்தார் என்றால் எந்த ஆண்டு மாதம், தேதி என ஞாபகமில்லைஇறந்து 40 வருடங்கள் ஆகிறது இறப்புச் சான்றிதழ் தாக்கல்செய்துள்ளேன். காலம்சென்ற சிங்கத்தேவருக்கு எத்தனை மனைவி என்றால் கணபதியம்மாள். மேற்படி கணபதியம்மாள் எந்த ஆண்டு மாதம், தேதியில் இறந்தார் என்றால் எந்த ஆண்டு மாதம், தேதி என ஞாபகமில்லைஇறந்து 35 வருடங்கள் ஆகிறது இறப்புச் சான்றிதழ் தாக்கல்செய்துள்ளேன். காலம்சென்ற சிங்கத்தேவர், கணபதியம்மாளுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 3 பேர், கோமதியம்மாள், அங்கப்பத்தேவர், வெள்ளைச்சாமி. அங்கப்பத்தேவர் எனது அப்பா என்றால் சரிதான். கோமதியம்மாளுக்கு திருமணம் ஆனதா என்றால் ஆமாம் திருமணமாகி 3 பெண், 1 ஆண் வாரிசுகள் உண்டு அவர்களின் பெயர் மாரியம்மாள், கணபதியம்மாள், கற்பகம், முருகன். முருகன் என்பவர் தான் இந்த வழக்கின் 1வது பிரதிவாதி என்றால் சரிதான். கோமதியம்மாள் எந்த ஆண்டு மாதம், தேதியில் இறந்தார் என்றால் எந்த ஆண்டு மாதம், தேதி என ஞாபகமில்லை இறந்து 20 வருடங்கள் ஆகிறது இறப்புச் சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன். அங்கப்பத்தேவருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 3 ஆண், 1 பெண், அவர்களின் பெயர் குருவம்மாள், சிங்கராஜ், அருணாச்சாலம், கணேசன். அங்கப்பத்தேவரின் மனைவி பெயர் என்ன என்றால் ஆவுடையம்மாள் அவர் தான் 6வது வாதி. வெள்ளைச்சாமிக்கு திருமணம் ஆனதா என்றால் ஆமாம், திருமணமாகி 3 மகன் உள்ளார்கள், அவர்களின் பெயர் கூடாரச்சாமி, பெரிய முத்தையா, முத்தையா. வெள்ளைச்சாமியின் மனைவி பெயர் என்ன என்றால் முத்தம்மாள் அவர் தான் 11வது பிரதிவாதி. காலம்சென்ற சிங்கத்தேவர், கணபதியம்மாளின் 3 பிள்ளைகள் கோமதியம்மாள், அங்கப்பத்தேவர், வெள்ளைச்சாமி வாரிசு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. எனது தந்தை அங்கப்பத்தேவரின் வாரிசு சான்றிதழை வாங்கிவிட்டேன் என்றால் சரிதான்.

எனது தாத்தா சிங்கத்தேவரின் அப்பா, அம்மா பெயர் என்ன என்றால் அங்கப்பத்தேவர், முத்தம்மாள். அங்கப்பத்தேவர், முத்தம்மாள் என் தாத்தா இறப்பதற்கு முன்பாகவே இறந்துவிட்டார்களா என்றால் ஆமாம். அங்கப்பத்தேவர், முத்தம்மாள் இறப்புச் சான்றிதழ் வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. எனது தாத்தா சிங்கத்தேவரின் வாரிசுகள் கோமதியம்மாள், அங்கப்பத்தேவர், வெள்ளைச்சாமி என கேட்டு வட்டாட்சியர் அவர்களிடம் மனு செய்தேன் என்றால் ஆமாம். எனது தாத்தா சிங்கத்தேவரின் நேரடி வாரிசுகள் கோமதியம்மாள், அங்கப்பத்தேவர், வெள்ளைச்சாமி உயிருடன் இல்லாததால் வாரிசு சான்றிதழ் வழங்க மறுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். எனது தாத்தா சிங்கத்தேவருக்கு நாங்கள் நேரடி வாரிசுகள் இல்லாததால் வாரிசு சான்று வழங்க இயலாது என்றால் சரியல்ல.

**<u>2 மற்றும் 3 வது பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.</u>**

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.04.18 17:58:12 +0530

## முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.

## O.S.No. 204/2025

**நாள்.18.04.2026**

**வா.சா.2 – குருநாதன்**

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் வாதிகளுக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என் தரப்பு சாட்சியத்திற்கு எழுத்து மூல பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். வழக்கறிஞருக்கு நான் சொல்லி தயார் செய்யப்பட்டு என்னால் படித்துப் பார்க்கப்பட்டு பின்பு கையொப்பம் செய்யப்பட்டது. கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்யக் கேட்டுக்கொள்கிறேன்.

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.9 | -- | வா.சா.2 ன் ஆதார் அடையாள அட்டை | ஒளி நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) |

**முதல் விசாரணை முடிக்கப்படுகிறது.**

**2 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் எந்த ஊரில் குடியிருக்கிறேன் என்றால் பெரியூர் கிராமம். எனக்கு என்ன வயது என்றால் 65 வயது. 8 வது வாதி சிங்கராஜை எனக்குத் தெரியுமா என்றால் தெரியும். 8 வது வாதி சிங்கராஜ் எனக்கு என்ன உறவு என்றால் எனது தம்பி. 8 வது வாதி சிங்கராஜ் என்ன வழக்குப் போட்டுள்ளார் என்றால் அவரது தாத்தாவின் வாரிசு சான்றிதழ் கேட்டு வழக்குப் போட்டுள்ளார். சிங்கத்தேவர் எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு இறந்துபோனார் என்றால் 40 ஆண்டுகளுக்கு முன்பாக. சிங்கத்தேவருக்கு எத்தனை மனைவி என்றால் ஒரு மனைவி கணபதியம்மாள். காலம்சென்ற சிங்கத்தேவர், கணபதியம்மாளுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 3 பேர், கோமதியம்மாள், அங்கப்பத்தேவர், வெள்ளைச்சாமி. கோமதியம்மாள், அங்கப்பத்தேவர், வெள்ளைச்சாமி உயிருடன் உள்ளார்களா என்றால் இல்லை இறந்துவிட்டார்கள். கோமதியம்மாளுக்கு திருமணம் ஆனதா என்றால் ஆமாம் திருமணமாகி 3 பெண், 1 ஆண் வாரிசுகள் உண்டு அவர்களின் பெயர் மாரியம்மாள், கணபதியம்மாள், கற்பகம், முருகன்.

அங்கப்பத்தேவருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 3 ஆண், 1 பெண், அவர்களின் பெயர் குருவம்மாள், சிங்கராஜ், அருணாச்சாலம், கணேசன். வெள்ளைச்சாமிக்கு திருமணம் ஆனதா என்றால் ஆமாம், திருமணமாகி 3 மகன் உள்ளார்கள், அவர்களின் பெயர் கூடாரச்சாமி, பெரிய முத்தையா, முத்தையா. வாதிகளுக்கும் 1 வது பிரதிவாதிக்கு சொத்து சம்பந்தமாக பிரச்சனை உண்டா என்றால் கிடையாது. சிங்கத்தேவர் அப்பா, அம்மா பெயர் என்ன என்றால் ஞாபகமில்லை. சிங்கத்தேவருக்கு வாதிகள் நேரடி வாரிசுகள் இல்லாததால் வாரிசு சான்று வழங்க இயலாது நான் வாதிகளுக்காக வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**2 மற்றும் 3 வது பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

**மறுவிசாரணை இல்லை.**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.04.18 17:58:19 +0530